**தலைப்பு 118 – கமத்தொழில், கிராமிய பொருளாதார செயற்பாடுகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில், கிராமிய பொருளாதார செயற்பாடுகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கமத்தொழில், கிராமிய பொருளாதார செயற்பாடுகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமத்தொழில், கிராமிய பொருளாதார செயற்பாடுகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவுக்கு 25 வதிவிட அலுவலகங்கள், 10 உத்தியோகபூர்வ இல்லங்கள், ஒரு சுற்றுலா விடுதி என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் அப்பெறுமதி நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி கணிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 434,958,714 ஆகக் காட்டப்பட்டிருந்தும் திறைசேரி அச்சுப் பிரதிகளில் ரூபா 432,177,817 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 2,780,898 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கணக்கிணக்கம் செய்து பிழைகள் சரி செய்யப்படுதல் வேண்டும். | இவ்வித்தியாசத்தை 2020 கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) 2019 ஆம் ஆண்டின் போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட கமத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமான 14 வாகனங்களின் பெறுமதி நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்புச்செய்யப்பட்ட வாகனங்கள் நிதியற்ற சொத்துக்கள் கூற்றிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கமத்தொழில் அமைச்சின் கீழுள்ள 14 வாகனங்களை கைதவிர்ப்புச் செய்ததன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 6,540,930 வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன கைதவிர்ப்பு வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். | அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடம் விசாரித்து எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்கின்றேன். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வுச் சான்று சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரிவின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 21,959,713 பெறுமதியான அலுவலகக் கட்டிடம் 2019 ஆம் ஆண்டில் பரிமாற்றம் செய்யப்பட்ட (Transfer) விடயமாக கைதவிர்ப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தும் கைதவிர்ப்பு செய்யப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கைதவிர்ப்புச் செய்யப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு விடயத்தினதும் பெறுமதியுடன் ஒரு பதிவேடு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |
| (ஆ) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரிவினால் 2019 ஆம் ஆண்டிற்னான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 5 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 295 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டில் ஒவ்வொரு செலவு விடயத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 277 மில்லியன் தொடர்பாக அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த பொழிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அமைச்சினால் கணக்கீடு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கோவைகள் பேணப்படாததனால் | அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளின் பயன்பாடு சம்பந்தமாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரிவினால் மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உரிய தகவல்களும் பேணப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் சம்பந்தமான அவதானிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது. அவ்வாறே கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரிவினால் அதிகார சபையினூடாக அமுல்படுத்தப்படுகின்ற இந்த அபிவிருத்திச் செயற்திட்டங்கள் சம்பந்தமான மேற்பார்வை அல்லது பின்தொடர் நடவடிக்கை செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆவது அத்தியாயத்தின் படி நீர்ப்பாசனப் பதிவேடு நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும் | நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் அதனை நாளதுவரையாக்குவதற்கு விடயத்திற்குப் பொறுப்பான இலிகிதருக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. |
| (ஆ) | **பிணைப் பதிவேடு** | | |
| | நீர்ப்பாசனப் பிரிவினால் நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் பரஸ்பர பிணைதாரர் சங்கத்தில் பதிவு செய்து கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்க வில்லை. | வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒரு பிணைப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் பதிவேட்டினைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.4 ஆம் பிரிவுகள் | 55 வயதினை அடைவதற்கு முன்னர் கடனாளி மரணமடைந்தால் / ஏதாவது காரணத்தினால் அல்லது சேவையிலிருந்து ஓய்வு பெற்றால் அந்த சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தின் போதான கடன் பணம் மற்றும் வட்டி செலுத்தாது எஞ்சியுள்ள அளவு கடனாளியின் திரண்ட ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுதல் வேண்டும். எனினும், மரணமடைந்த 15 ஊழியர்களிடமிருந்து இடர் மற்றும் விழாக் கடனுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 158,464 கடன் மீதி மற்றும் ஓய்வுபெற்று 05 ஆண்டுகள் காலத்தை மிகைத்த 23 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 266,046 கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையிலுள்ள உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டம். | 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளாகயிருப்பதனால் கோவைகளை தேடிப் பார்த்துக் கொள்ள முடியாததனால் தகவல்களை தேடிப் பார்த்தல் சிக்கலாக உள்ளது. அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 369 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் ------------------------ | | | |
| (i) | நி.பி 128(1)(ஏ) | 2019 ஆம் ஆண்டில் நெல் விற்பனையில் நிலுவையாகக் காணப்பட்ட வருமானம் தொடர்பான அறிக்கையை தயாரிப்பதற்கு மற்றும் அவற்றினை அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 128(1)(ஏ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிலுவை வருமானத்தை கணித்து உள்ளடக்கப்படுகின்றது. |
| (ii) | நி.பி 1646 | கமத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகளின் பயணங்கள் தொடர்பாக மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் ஒவ்வொரு மாதத்தின் நாளாந்த அட்டவணைகள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சிற்குச் சொந்தமான 12 குளாம் வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 நவம்பர் மாதத்திலிருந்து அத்தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நி.பி 105(4) | நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவில் கிரிதலே வியாபார முகாமைத்துவ அலுவலகத்தின் நாச்சியாதீவு மற்றும் வெலிஓயா வதிவிட வியாபாரம் ஆகிய அலுவலகங்களினதும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | நி.பி 105(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய நிறுவனங்களின் பொருள் மெய்மையாய்வு உரிய திகதிகளில் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் காணப்பட்ட குறைபாடுகளினால் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளுக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2015 யூலை மாதம் 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவு | கமத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான கைதவிர்ப்புச் செய்ய வேண்டிய வாகனங்களை இனங்கண்டு அது தொடர்பான தகவல்களை உரிய ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மற்றும் கைதவிர்ப்பு நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பான தகவல்களை உரிய ஆண்டின் யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் முறையே படிவம் இலக்கம் 01 மற்றும் படிவம் இலக்கம் 02 இல் நிர்ணயிக்கப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கா ததனால் அப்படிவங்களைப் பூரணப்படுத்தி தாமதமின்றி உரிய பிரிவிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் 03 மாதங்களுக்குள் பொறுப்பேற்றல் அல்லது தீர்த்து வைத்தல் செய்யப்பட வேண்டியதுடன் அக்காலத்தின் பின்னர் அம்மீதிகள் கணக்கீடு செய்யப்படாதிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சின் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏனைய அமைச்சு / திணைக்களம் மற்றும் மாகாண சபைக்கு இடமாற்றப்பட்டள்ள 14 உத்தியோகத்தர்களின் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த ரூபா 153,526 தொகையான அறவிட வேண்டிய கடன் மீதி 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 28 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான கடன் மீதி என்பதனால் கோவைகள் இல்லாமையினால் தகவல்களை தேடிப்பார்த்தல் சிக்கலாக உள்ளது. அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 369 ஆம் பிரிவுக்கு இணங்க கடனை பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நீர்ப்பாசனப் பிரிவு நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்த கட்டுநிதி தேவைப்பாடு ரூபா 2,455,715,000 ஆக இருந்தும் திறைசேரியினால் வழங்கப்பட்ட கட்டுநிதி ரூபா 1,104,073,173 ஆக இருந்தது. அதற்கிணங்க திறைசேரியிடமிருந்து கிடைக்காத கட்டுநிதி வேண்டப்பட்ட கட்டுநிதிகளில் 55 சதவீதமாக இருந்தது. | ஆண்டின் ஆரம்பத்திலிருந்து அங்கீகரித்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துவதற்காக நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | கட்டுநிதி கிடைக்கின்ற முறைமையின் பிரகாரம் கட்டுநிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உபகட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், கமத்தொழில் அமைச்சின் 50 உத்தியோகத்தர்களினால் 105 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 2,212,254 உப கட்டுநிதிகளை தீர்த்து வைப்பதற்கு 01 | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்நிலைமையை முடியுமான அளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| நாளிலிருந்து 80 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | | |
| (இ) நிதிப்பிரமாணம் 371(3) இன் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளுவதற்குப் பொருத்தமற்ற செயற்பாடுகளுக்காக உபகட்டுநிதி எடுத்துக்கொள்ளக் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தும் நடைமுறை ஆண்டின் போது கமத்தொழில் அமைச்சின் 11 உத்தியோகத்தர்கள் 14 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொண்ட ரூபா 170,059 தொகையான செயல் நிமித்த உபகட்டுநிதி 01 நாளிலிருந்து 06 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் வைத்துக் கொள்ளப்பட்டு அப்பணம் முழுவதும் மீளத் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவிர்க்க முடியாத காரணத்தினால் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. இவ்வாறான நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விவசாய அமைச்சின் 118-1-10-1-1409 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் நெல் கொள்வனவு செய்வதற்காக கிராமிய அபிவிருத்தி பிரிவிற்கு ரூபா 3,118,000,000 மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 20 மாவட்ட செயலகங்களுக்கு ரூபா 1,959,912,319 தொகை நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது 08 மாவட்ட செயலகங்களின் | மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானத்தைக் கணித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிலுவை வருமானத்தை கணித்து உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

மூலம் அது தொடர்பாக 118-2003-07-00 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது ரூபா 299,814,540 மாத்திரமாகும். இதற்கிணங்க நெல் விற்பனையால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய குறிப்பிடத்தக்க அளவான நிலுவை வருமானத்தை கணித்து அவற்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.3 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கமத்தொழில் அமைச்சின் 20 மூலதன செலவு விடயங்களின் ரூபா 6,762,400,000 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மற்றும் 08 மீண்டுவரும் செலவு விடயங்களின் ரூபா 5,104,666 ஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | மதிப்பீடு முடியுமான அளவு சரியாக முன்னறியப்பட்டிருந்தும் தவிர்க்க முடியாத நிலைமையின் அடிப்படையில் சேமிப்பு இடம்பெற்றிருந்தது. |
| (ஆ) | கமத்தொழில் அமைச்சினால் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சரியாக முன்னறிந்து செய்யப்படாமையினால் தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட 76 மூலதன செலவு விடயங்களின் மற்றும் தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கு மேற்பட்ட 85 மீண்டுவரும் செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த மூலதன மற்றும் மீண்டுவரும் செலவு | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | செலவுக் கட்டுப்பாடு, தேவைப்பாடு உருவாகியிருக்காமை, பதவியணியினர் மாற்றமடைதல், கட்டுநிதி கிடைக்காமை ஆகிய பல்வேறு விடயங்களின் அடிப்படையில் சேமிப்புக்கள் இடம்பெற்றிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களுக்காக தேறிய நிதிஏற்பாடு ரூபா 7,634,792,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,314,504,316 அதாவது 43.41 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | விவசாய அமைச்சின் 04 செசலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 441,167,370 தொகையான மேலதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அந்த மேலதிக நிதிஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | திட்டமிடப்பட்ட சில செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாமை, தொழில் நுட்ப சிக்கல், காலநிலை என்பவற்றினால் தேவையான கட்டுநிதி கிடைக்காமை ஆகிய விடயங்களின் காரணமாக சேமிப்பு ஏற்பட்டிருந்தது. |
| (ஈ) | விவசாய அமைச்சினால் தொடக்க மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது 5 செலவு விடயங்களுக்காக மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை யின் காரணமாக ரூபா 93,700,000 கூட்டு மொத்தமான நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 49 சதவீதம் அதாவது ரூபா 46,381,000 தொகை நி.பி 66 இன் மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த 5 செலவு விடயங்களின் ஒட்டு மொத்த செலவுகள் மாற்றப்பட்ட நிதி ஏற்பாட்டில் 22 சதவீதம் அல்லது ரூபா 20,463,552 ஆக இருந்ததுடன் சேமிப்பு 27 சதவீதம் அல்லது ரூபா 26,858,448 ஆகும். மேற்கூறிய செலவு விடயங்களுக்காக மிகை மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருந்ததுடன் நி.பி 66 இன் மூலம் மேலதிக | - மேற்படி - | பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், அமைச்சு பதவிகள் மாற்றமடைதல் கமத்தொழில் அமைச்சிற்காக புதிய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பிரேரணை அமுல்படுத்தப்படாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமித்தல் இடம்பெற்றிருந்தமையால் சேமிப்பு உருவாகியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | நிதிஏற்பாடு ஏனைய செலவு விடயங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அச்செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு 15 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் அளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதனச் செலவுகளிலிருந்து 15 சதவீதம் சேமிப்பாக இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டில் மேலும் 10 சதவீதம் கட்டாயம் சேமிக்கப்பட வேண்டுமென 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், விவசாய அமைச்சினால் 50 மூலதனச் செலவு விடயங்களின் ரூபா 10,434,782,000 தொகையான நிதி ஏற்பாட்டில் 25 சதவீத சேமிப்பு ரூபா 2,608,695,500 ஆக இருக்க வேண்டிய போதிலும், ரூபா 949,643,278 மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுற்றறிக்கை வழங்கப்படுகையில் சில செலவு விடயங்களுக்காக கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த தனால் நிதிஏற்பாட்டினை சேமிப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை. இது தொடர்பாக பாதீட்டு திணைக்களத்திற்கு தெரியப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | கமத்தொழில் அமைச்சின் 118-1-10-1-1409 ஆம் இலக்க நெல் கொள்வனவு செய்யும் செலவு விடயத்திற்காக 6 குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 3,118 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 1960 மில்லியன் மாத்திரம் | தேவைப்பாட்டின் அடிப்படையில் திட்டங்கள் மேற்கொண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | மாவட்ட செயலகத்தின் மூலம் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலின் பிரகாரம் ரூபா 3,118 மில்லியன் நிதி ஏற்பாடு வேண்டப்பட்டிருந்தும் ரூபா 1960 மில்லியனுக்கு மாத்திரம் நெல் கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க சேமித்தல் சதவீதம் 37 ஆகும். 2 தொடக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் இச்செலவுகளைத் தீர்த்து வைப்பதற்கான இயலுமை இருந்தும் மேலதிகமாக 4 குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 118 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | செய்வதற்கு முடியுமாக இருந்தது. |
| (எ) | நிதிஏற்பாட்டுத் தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்டு கொள்ளாது நி.பி 66 இனைப் பயன்படுத்தி செலவு விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் காரணமாக நீர்ப்பாசனப் பிரிவின் 03 செலவு விடயங்களுக்காக மாற்றம் செய்யப்பட்ட ரூபா 289,700,000 தொகை முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2019 யூன் 17 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் படி அரசாங்க செலவுகள் மிகைவும் சிக்கனமாகவும் வீண்விரயத்தைக் குறைக்கும் வகையிலும் ஒழுங்கு விதிகள் ஈடுபடுத்தப்பட்டதனால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |
| (ஏ) | நீர்ப்பாசனப் பிரிவின் 04 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,480,000 தொகை பயன்படுத்தப்படாது முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2019 யூன் 17 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் படி அரசாங்க செலவுகள் அதிக சிக்கனமாகவும் வீண்விரயத்தைக் குறைக்கும் வகையிலும் ஒழுங்கு விதிகள் ஈடுபடுத்தப்பட்டதனால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசனப் பிரிவின் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ஒப்பந்த பிடித்து வைத்தல் பணம் ரூபா | நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்புக்களின் காலம் காலாவதியாகியிருந்த போதிலும், நிறுத்தி வைத்தல் பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | 1,779,234 தொகை வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தும் நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் மீளச் செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | விடுவிப்பதற்கான வேண்டுகோள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைத்திருக்காததனால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை. எதிர்காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | கொத்மலை நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அமைய ஊழியர் களிடமிருந்து சம்பளத்தில் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் அறவிடப்பட்ட ரூபா 1,486,706 தொகையான அரசாங்க ஊழியர் சேமலாக நிதியத்திற்கான பங்களிப்பு அந்நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாது நியதிச்சட்ட கொடுப்பனவு களுக்கான தற்காலிக நிறுத்தி வைத்தலாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. அந்த செலுத்த வேண்டிய மீதிகளில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 379,434 ஆக இருந்தது. | அரசாங்க சேவையில் ஈடுபட்டு ஓய்வூதியத்திற்குத் தகைமையற்ற ஊழியர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட அரசாங்க சேவை சேமலாப கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஊழியர்களின் பங்களிப்பு அறவிடப்பட்டிருந்தும் நிறுவனத்தின் பங்களிப்பிற்காக ஊழியர் பயிற்சி நெறிகளின் மிகுதி போதியதாக இருக்கவில்லை. மிகுதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் சேமிப்புக்களின் மூலம் 2020 ஆம் ஆண்டின் போது உரிய வைப்புப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கமத்தொழில் அமைச்சின் 28 செலவு விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 40,303,499,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ஆண்டின் போது ரூபா 38,460,072,632 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 1,843,426,368 ஆகும். எனினும், அச்சேமிப்பினை மிகைத்து ரூபா 23,884,831,921 தொகையான பொறுப்புக்களுக்காக கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் மேற்கொள்ளப்படா திருத்தல் வேண்டும். | உரிய வவுச்சர்களை தாமதமாக சமர்ப்பித்ததன் அடிப்படையில் அப்பெறுமதிகள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரிவினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காகச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் குறிப்பு III இன் கீழ் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளைப் பரீட்சித்த போது நி.பி 94 இற்கு முரணான வகையில் நிதி ஆண்டிற்காக 03 மூலதன விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 47,992,224 ஆல் மிகைத்து செலவுகளுக்காக கடப்பாடுகள் செய்து கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே சரியாக பணத்தைச் செலுத்துவதற்கு ஏற்படுகின்றகாலம் வரை தேவையான அதிகாரம் இல்லையாயின் மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பில் செலவுகள் | நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளலாகாது. | கருத்துரைகள் தரப்படவில்லை. |

அல்லது பொறுப்புக்கள் மேற்கொள்ளலாகாது என்பது இதன் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழுள்ள கைத்தொழில், கிராமிய பொருளாதார செயற்பாடுகள், நீர்ப்பாசனம், கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி ஆகிய பிரிவுகளில் சேவையாற்றி சேவையை விட்டுச் சென்ற 29 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 793,931 கூட்டு மொத்த தொகையான அறவிட வேண்டிய கடன் மீதிகள் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் அக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்கடன் மீதிகளைப் பதிவழிப்பதற்காக திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பு மற்றும் கட்டுப்பாட்டு கணக்கு மீதி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 415,636 தொகையான இனங்காணப்படாத கடன் மீதி காணப்பட்டிருந்தும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத கடன் மீதியினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக தேடிப்பார்த்து தீர்த்து வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கிராமிய அபிவிருத்தி பிரிவினால் அமெரிக்க டொலர் 73,954,055 தொகையான கடன் பணத்திற்கு அவுஸ்ரேலியாவிலுள்ள 2 தனியார் வங்கிகளுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் உடன்படிக்கை செய்து 20,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்கு அவுஸ்ரேலியாவிலுள்ள வெலாட் ரூரல் எக்ஸ்போட் (Wellaed Rural Export) நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை இரண்டு கட்டங்களாக அமுல்படுத்துவதற்கும் அவற்றில் முதலாம் கட்டத்தின் கீழ் 5000 பசுக்களை இறக்குமதி செய்து இப்பசுக்கள் வெற்றியளித்திருக்கு மாயிருந்தால் மாத்திரம் இரண்டாவது கட்டத்தின் கீழ் முற்பணங்கள் வழங்கி 15,000 பசுக்களின் இறக்குமதியை 2020 ஆம் ஆண்டின் இறுதிவரை பூர்த்தி செய்வதற்கும் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும், அமைச்சிற்கு 2018 பெப்ரவரி 27 மற்றும் 2018 மே 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் மூலம் மற்றும் பிரசித்த வெகுசன ஊடகங்களினால் முன்னர் கொண்டுவரப்பட்ட | செலுத்தப்பட்ட பணத்திற்குரிய பசுக்களை விரைவாகப் பெற்று செயற்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் வேண்டும். | நிதி அமைச்சில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு இணங்கிக் கொள்ளப்பட்ட பணம் செலுத்தப்பட்டது. அவ்வாறே செயற்திட்டம் கைவிடப்படாததுடன் இரண்டாம் கட்டத்தில் நோக்கெல்லையை மாற்றம் செய்து நிறைவேற்றப்படும் முதலாம் கட்டடித்தில் பண்ணைக்காக சேவை வழங்குதல் இடம்பெற்றது. |

| | | | |
|---|---|---|---|
| | பசுக்கள் வெற்றியளித்திருக்க வில்லை என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சின் கீழ் இச் செயற்திட்டத்திற்கு செலவு செய்வதற்கு ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் நிதி ஏற்பாடு இல்லாதிருந்தும் மிகுதியான 15,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்காக அமெரிக்க டொலர் 55,465,541 தொகையானது மொத்த பணத்தில் 20 சதவீத முற்பணமாக 2018 மே 08 ஆந் திகதி அமெரிக்க டொலர் 11,093,108 தொகை அதாவது ரூபா 1,749,672,697 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மேலே கூறிய உத்தேசிக்கப்பட்ட எப்பசுவும் 2018 இலிருந்து 2020 ஆகஸ்ட் வரை இறக்குமதி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கடற்கரை புனரமைப்பு மற்றும் வளங்களை முகாமைத்துவம் செய்தல் செயற்திட்டத்தின் கீழ் கடற்றொழில் சமூகத்தை அபிவிருத்தி செய்யும் பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 70 மில்லியன் நிதிஏற்பாடு தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு மீன் அடைகாத்தல் நிலையத்தை (Hatchey) நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 57.288,684 செலவு செய்யப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சித்ததிட்டத்தை அமுலப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளாக புதிய தொழில்நுட்பத்தினை | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிதிகள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அறிமுகப்படுத்துவதற்கு செயற்திட்டத்தினை அமுல்படுத்துதல், உவர்நீர் மற்றும் கடற்கரை நீர் உயிரினங்களுக்காக செயற்திட்டத்தை அமுல்படுத்துதல், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செயற்திட்டங்களை அமுல்படுத்துதலும் மீனவ மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் முதலியவாறு இனங்காணப்பட்டிருந்தும் பல ஆண்டுகளாக எதிர்பார்த்த வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக பணம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படாததுடன் அப்பணத்தை ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துதல் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தது. | | |
| (இ) | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்பவற்றை உள்ளடக்கிய 10 கடற்கரை மாவட்டங்களிலுள்ள கிராமங்களை மேம்படுத்தும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. அந்நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி திணைக்களம் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி | நிதி ஏற்பாடானது உரிய செயற்பாடு களுக்காகவே ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையினால் முன்னைய ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட தியவர பியச மீனவர் வீடுகள் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் உதவி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தி அதற்காக ரூபா 46 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் நன்னீர் மீன் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு நன்னீர் நீர்த்தேக்கங்களுக்காக மீன் குஞ்சுகளை இடுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கீழ் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 30 மில்லியன் வீதம் நிதிகளை வழங்குதல் 2008 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தது. 2008 யூலை மாதம் 16 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இச்செயற்திட்டத்துக்கு ரூபா 30 மில்லியன் வீதம் வருடாந்த மதிப்பீட்டிற்கு உள்ளடக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 08/1248/351/016 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கு இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட கருத்துரைகளின் பிரகாரம் 5 ஆண்டுகளின் போது மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் வருமானம் அதிகரித்துள்ளதன் காரணமாக சுய நிதியளிப்பில் ஈடுபடுதல் அவசியம் என காட்டப்பட்டிருந்தது. எனினும் அமைச்சினால் இச் செலவு | மீன்குஞ்சுகளை வைத்திருக்கும் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வருடாந்தம் நிதி ஏற்பாட்டினை வழங்குதலினை நிறுத்தி சுய நிதியளிப்பில் ஈடுபடுதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

விடயத்திற்காக 05 ஆண்டுகளை மிகைத்து மேலும் 07 ஆண்டுகள் தொடர்ச்சியாக ரூபா 30 மில்லியன் வீதம் அதிகார சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானம் அதிகரித்தலினை கவனத்தில் கொண்டு சுய நிதியளிப்பில் ஈடுபடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் அல்லது அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்பார்வை செய்தல் இடம்பெற்றது என்பதற்கான தகவல்கள் காணப்படவில்லை.

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் 2019 ஆம் ஆண்டிற்கான மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிப்பதனை உள்ளடக்கி 20 செயற்பாடுகளுக்காக ரூபா 1 ,587 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது 05 மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணிப்பதனை உள்ளடக்கிய 11 செயற்பாடுகளுக்காக ரூபா 1,067 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) களமெடிய மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணித்தல் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தும் 2019 ஆம் ஆண்டின் போதும் ரூபா 105 | எதிர்பார்த்த காலப்பகுதிக்குள் செயற்பாடுகளை முடிவுறுத்தி பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் இதற்காக செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் இதன் நிர்மாண வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. | வேண்டும். | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த சிலாபம் பசுமையான மீன்பிடித் துறைமுக நிர்மாணத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 28 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதமடைந்திருந்தும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | முடிவுறுத்த வேண்டியிருந்த நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | ரூபா 350 மில்லியன் மொத்த கிரய மதிப்பீட்டின் கீழ் 2018 யூன் மாதம் முடிவுறுத்த வேண்டியிருந்த மிரிஸ்ஸ பசுமையான மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிக்கும் மிகுதி வேலைகளுக்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 18 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதற்காக எதுவித பணமும் செலவு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |
| (ஈ) | மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 392 தொகையான மயிலிட்டி துறைமுகத்தை மீன்பிடித் துறைமுகமாக மாற்றுதல் மற்றும் தேவையான வசதிகளை ஸ்தாபித்தல், செயற்திட்டம் 2019 மே மாதம் அளவில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 88 மில்லியன்செலவு செய்யப்பட்டிருந்தும் நீர்த் தடுப்பினை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அதன் செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | கருத்துரைகள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2018 யூன் மற்றும் 2017 யூலை மாங்களில் முடிவுறுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்களான பெரலிய நங்கூரமிடல் துறையை நிர்மாணித்தல் மற்றும் காலி இறங்குதுறை மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணித்தல் என்பவற்றிற்காக 2019 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 17 மில்லியன் ரூபா 22 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அந்த நிர்மாணங்களை முடிவுறுத்தி ஒப்படைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | - மேற்படி - | கருத்துரைகள் தரப்படவில்லை. |
| (ஊ) | 2018 சனவரி முடிவுறுத்தப்பட வேண்டி இருந்த காரைநகர் படகுத்துறையை நிர்மாணித்தல் கட்டம் I, II மற்றும் III இற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 39 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் ரூபா 13 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தும் வேலை முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை. | மேலும் தாமதமின்றி பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |
| (எ) | 2019 மார்ச் மாதத்திலிருந்து 2019 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் III ஆம் கட்டம் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 63 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் செயன்முன்னேற்றம் 38 சதவீதம் மாத்திரமாகும். | நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியின் இறுதியில் செயற் திட்டத்தின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | கருத்துரைகள் தரப்படவில்லை. |

## 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கையின் மீன்பிடி மற்றும் நீர் உயிரின வளர்ப்புத் துறைக்கு நீண்டகாலமாக ஒரு தேசிய கொள்கையை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக 2017 மார்ச் மாதத்தின் போது இலங்கை அரசாங்கத்திற்கும் நோர்வே வெளிநாட்டு விவகார அமைச்சிற்குமிடையே ரூபா 149,400,000 (க்ரோன் 8,300,000) தொகை மானியம் வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 10.1 மற்றும் 10.3 ஆம் நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கூறிய செயற்திட்டத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமெனத் தெரியப்படுத்தியிருந்தும் கடந்த 2 ஆண்டுகளுக்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**3.4 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **விவசாய அமைச்சிற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடங்கள்**<br>---------------------------------------------------<br>இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பாராளுமன்ற தெரிவுக் குழு நடைமுறையை மறுசீரமைத்தல் மற்றும் மேலதிக அலுவலக இடவசதித் தேவைப்பாட்டிற்காக விவசாய அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ‘‘கொவிஜன மந்திரய’’ இனை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக விவசாய அமைச்சிற்கு இராஜகிரியவிலுள்ள 09 மாடிகளைக் கொண்ட ஒரு தனியார் கம்பனிக்குச் சொந்தமான கட்டிடம் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு ரூபா 21 மில்லியன் குத்தகை வாடகை மற்றும் ரூபா 6 மில்லியன் சேவைக் கட்டணத்தை செலுத்தும் அடிப்படையில் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.1 மற்றும் 3.2.2 ஆம் பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு மற்றும் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானம் மற்றும் அதற்காக 2016 மார்ச் 02 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இடம்பெற்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஒட்டுமொத்த பதவியணியினர் 300 அளவிலான விவசாய அமைச்சிற்கான கட்டிடத் தேவைப்பாடு 66,500 சதுர அடியாக இருந்த போதிலும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 09 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் சதுர அடி அளவு 103,000 ஆகும். மேலும், நி.பி 835(2)(உ) இன் பிரகாரம் குத்தகைக் காலப்பகுதி உச்ச அளவு 03 ஆண்டுகளாக இருந்த போதிலும் குத்தகைதாரரின் வேண்டுதலின் அடிப்படையில் அது 05 ஆண்டுகளாக காட்டப்பட்டிருந்தமை மற்றும் 03 ஆண்டுகளின் பின்னர் குத்தகை வாடகையை 15 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும் 02 ஆண்டுகள் குத்தகை வாடகையான ரூபா 504 மில்லியன் பணத்தை ஒரே தடவையில் செலுத்தும் நிபந்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற சட்ட விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விவசாய அமைச்சினால் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2016 மார்ச் 10 ஆந் திகதி கிடைத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அமைச்சிற்குரிய அலுவலக வளவினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | அவ்வாறே அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் கட்டிடத்தின் சந்தை வாடகை ரூபா 13.5 மில்லியனாக இருந்த போதிலும் அதனை மிகைத்து ரூபா 21 மில்லியன் வாடகையைச் செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,229.58 மில்லியன் குத்தகைப் பணம், (VAT மற்றும் NBT யினை உள்ளடக்கி) சேவைக் கட்டணம் ரூபா 229.20 மில்லியன் தொகை, மின்சாரப் பட்டியல்களுக்காக ரூபா 63.64 மில்லியன் தொகை மற்றும் நீர்ப் | - மேற்படி - | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அப்போதிருந்த அமைச்சு செயலாளர் மற்றும் கட்டிட உரிமையாளரினால் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்தது. அதற்கிணங்க உடன்படிக்கையின் நிபந்தனைகள் அமுல்படுத்தப் பட்டிருந்தன. |

பட்டியல்களுக்காக ரூபா 2.017 மில்லியன் என்பனவாக ரூபா 1,524.44 மில்லியன் மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இக்கட்டிடத்தினை அலுவலக தொகுதியாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான அறைகளைப் பிரித்து பாகுபடுத்துதல், தளவிரிப்புக்களை விரித்தல், தகவல் முறைமையை ஸ்தாபித்தல், அலுவலக மனைப் பொருட்களை கொள்வனவு செய்தல் என்பவற்றிற்காக ரூபா 342.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியிலிருந்து தொடக்க 15 மாதங்களுக்குள் தேவையான அலுவலக வசதிகள் (அறைகளாகப் பிரித்து பாகுபடுத்துதல், தளவிரிப்புக்களை விரித்தல், தகவல் முறைமையை ஸ்தாபித்தல்) இல்லாமல் போவதன் அடிப்படையில் கட்டிடங்கள் அலுவலக செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் தெரிவுக்குழு முறைமையை ஸ்தாபிக்கும் நடவடிக்கைக்காக முழுமையாக ஈடுபடுத்தப்படாததனால் அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2020 சனவரி மாதம் 31 ஆந் திகதியிலிருந்து மீண்டும் அமைச்சு பழைய அலுவலகத் தொகுதியான ''கொவிஜென மந்திரய'' இற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. எனினும், 2020 சனவரி மாதத்திலிருந்து 2020 ஆகஸ்ட் மாதம் வரை உடன்படிக்கையின் பிரகாரம்

ரூபா 28.05 மில்லியன் பணம் குத்தகை வாடகை மற்றும் சேவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை மற்றும் சேவைக் கட்டணத்தை செலுத்துவதற்கு அமைச்சு கட்டுப்பட்டுள்ளது.

### 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பசளைகள் செயலகத்தினால் தேசிய பசளை நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்து வதற்காக தரமான பசளைகளை இறக்குமதி செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | தேசிய பசளைகள் செயலகத்தினால் நெல்லுக்கான பசளைத் தேவைப்பாட்டினைத் தீர்மானிக்கும் போது போகத்தில் எஞ்சியுள்ள பசளை இருப்பு, நாளதுவரையான பசளை சிபார்சு, நாளதுவரையான தகவல் முறைமை என்பவற்றை பேணுதல் இடம்பெற்றிருக்கவில்லை. | ஒவ்வொரு போகத்திலும் பயிரிடப்படுகின்ற வயல் காணிகளின் பிரகாரம் பசளைத் தேவைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்காக நாளதுவரையாக்கப் பட்ட தகவல் முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். | தகவல் முறைமை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | போட்டியான பெறுகை நடைமுறைகளின்றி இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்வதற்காக கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | போட்டி பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | தேசிய பசளை செயலகத்தின் கொள்கைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் உத்தேச முறைமைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | பின்பற்றப்படும். எதிர்காலத்தில் விருப்பங்களைக் கோருவதன் மூலம் அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமாக வழங்குனர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளின் தரத்தை பரீட்சிப்பதற்காக மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளுதல் துறைமுகத்தினுள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பசளைகளை இறக்குமதி செய்கின்ற கம்பனிகளுக்குச் சொந்தமான திறந்த களஞ்சியங்களிலிருந்து மாதிரிகள் பெற்றுக் கொள்ளுதல் இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | உள்ளக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | துறைமுகத்திலுள்ள கொள்கலன்களிலிருந்து நேரடியாக பசளை மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறை தயாரித்ததன் பின்னர் இச்சிக்கல் ஏற்பட மாட்டாது. |
| (iv) | இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளைப் பரீட்சிப்பதற்காக ஆய்வுகூடத்தினை தெரிவு செய்தல், ஆய்வு கூடத்திற்கு மாதிரிகளை அனுப்புதல், ஆய்வுகூட அறிக்கையினைப் பொறுப்பேற்றல், பரீட்சித்தல், வியாபார அங்கீகாரத்தினை வழங்குதல் ஆகிய நடைமுறை தொடர்பாக பசளை செயலகத்தில் முறையான மற்றும் போதியளவான ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | பசளை செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆய்வுகூட அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுதலை மின்அஞ்சல் மூலம் பெற்றுக் கொள்வதற்கும், விருப்பத்தினைக் கோருவதன் மூலம் ஆய்வுகூடங்களைத் தெரிவு செய்வதற்கு மற்றும் இலங்கை பசளை கம்பனிக்குச் சொந்தமான ஆய்வு கூடங்களை பொறுப்பேற்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (v) | தேசிய பசளை செயலகத்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளின் தரத்தைப் பரீட்சிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்படுகின்ற மாதிரிகளுக்குரிய ஆய்வுகூட அறிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளை பரீட்சித்த போது போலியாகத் தயாரிக்கப்பட்ட 55 இற்கு அண்மித்த அளவான அறிக்கைகள் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க 9 பசளை வகைகள் தொடர்பாக 81,655 மெற்றிக்தொன் தரம் குறைந்த நியம தரமற்ற பசளைகள் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | போலியான ஆய்வு கூட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கு மாயிருந்தால் உரிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான விசாரணை நடாத்தி சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | போலியான பகுப்பாய்வு அறிக்கைகளை கோவைகளில் உள்ளடக்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அரசாங்க கணக்காய்வு உத்தியோகத்தர்களின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவு விடய இலக்கம் 118-2-3-20-2509 இன் கீழ் ரூபா 83,973,934 தொகையான செலவில் விவசாயக் கிராமங்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற பெயரில் ஒரு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக கஹத்தவெல கிராமம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அச்செயற்திட்டம் தொடர்பாக பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2015 மே 20 ஆந் திகதிய 11/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுமக்களின் பணம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இணங்குகின்றேன். எவ்வாறாயினும், இவ்வாறு பகிரங்கப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்யப்பட்டு கடமை ரீதியான விழாக்களை நடத்துதல் மட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் செலவுகளைக் குறைக்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தும் ரூபா 1,486,083 செலவு செய்யப்பட்டு நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் விழா நடாத்தப்பட்டிருந்தது. | | தானது இந்நிகழ்ச்சித் திட்டத்தை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் அடிப்படையான எதிர்பார்ப்புடன் என்பது அவதானிக்கப்பட்டது. |
| (ii) | விவசாய அமைப்புக்கள் சிலவற்றின் ஒன்றிணைப்புடன் மிகவும் ஒழுங்குமுறையான விவசாயக் கம்பனி உருவாக்கப்பட வேண்டிய போதிலும், கஹத்தவெல லிமிட்டட் என்ற பெயரில் அமைச்சின் நேரடி தலையீடு இன்றியும் மேற்பார்வை இன்றியும் ஒரு மக்கள் கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அக்கம்பனியைத் தோற்றுவிக்கும் குறிக்கோளில் சில நபர்கள் ஒன்று சேர்ந்து 2018 ஆம் ஆண்டின் போது ஒரு விவசாய அமைப்பினை தோற்றுவித்திருந்தும் அந்த விவசாய அமைப்பு கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | பிரதேசத்திலுள்ள விவசாய அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |
| (iii) | அனைத்து பிரதிபலன்களும் அக்கம்பனிக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கம்பனியின் அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்காக ரூபா 1,406,217 தொகையும் விவசாயிகளுக்காக ரூபா 45,914,600 தொகையும் செலவு செய்யப்பட்டு பாதுகாப்பு பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பாதுகாப்பு பொருட்களின் | இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உரிய நலன்களை விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாவது போகத்திலிருந்து 50% ஆன விவசாயிகள் பங்களிப்பினை கம்பனியினால் அறவிட்டு அப்பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியில் 50 சதவீதத்தை நலன்பெறுநர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (iv) | அவ்வாறே ரூபா 770,000 பெறுமதியான 35 மின்சார தெளி கருவிகள் மக்கள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒன்று ஒரு மாதத்திற்கு ரூபா 1,000 பணத்திற்கு விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் வழங்கி கம்பனிக்கு வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் அந்த வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. இயந்திரங்களை களஞ்சியப்படுத்துவதற்கும் காய்கறி மற்றும் பழங்களை சேகரிக்கும் நிலையங்களுடன் மாதிரிப் பண்ணையாக மேம்படுத்தி சங்கராஜ பிரிவேனா வளவில் ஒரு மாதத்திற்கு ரூபா 1,000 என்ற குறைந்த வாடகைக்கு மக்கள் விவசாயக் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரிய வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (v) | அவ்வாறே ரூபா 10 மில்லியனுக்கு அண்மித்த பழ நாற்றுக்கள், விவசாய உபகரணங்கள், தேனீ வளர்ப்பு உபகரணங்கள் என்பன மேற்கூறிய மக்கள் விவசாயக் கம்பனியின் பங்குதாரர்களுக்கு இலவசமாக எதுவித அடிப்படையுமின்றி வழங்கப்பட்டிருந்தது. | அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நலன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**04.** **மனிதவளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) நீர்ப்பாசன பிரிவின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 09 பதவிகள், மூன்றாம் மட்டத்திலுள்ள 01 பதவி, நாடளாவிய மட்டத்திலுள்ள ஒரு பதவி மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள 10 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசியமான பதவி வெற்றிடங்களை விரைவாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடங்கள் உள்ள உரிய பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) விவசாய அமைச்சில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 36 பதவிகள், மூன்றாம் மட்டத்திலுள்ள 05 பதவிகள், இரண்டாம் மட்டத்திலுள்ள 301 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள 20 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அத்தியாவசியமான பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடமாக உள்ள உரிய பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவிகள் சம்பந்தமாக உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |